உ
# மலேசிய இந்துதர்ம மாமன்றம்
# MALAYSIA HINDHUDHARMA MAMANDRAM
No. 61-2, Jalan SBC 1, Taman Sri Batu Caves, 68100 Batu Caves, Selangor D.E
http:/www.mamandram.org

## தேசியத் தலைவரின்
## வாழ்த்துச் செய்தி

திருச்சிற்றப்பலம். அனைவரும் திருவருளின் அருள் பெற்று நலமுடன் வாழ்ந்திட பரம்பொருளிடம் பிரார்த்தனை செய்கிறேன். இதன்வழி மாமன்றப் பொறுப்பாளர்கள், உறுப்பினர்கள் மற்றும் ஆதரவாளர்கள் அனைவரையும் சந்திப்பதில் பெருமகிழ்வடைகின்றேன்.

மாமன்றத்தில் முக்கிய அங்கமாகக் கருதப்படும் அருள்நிலையங்கள் ஆண்டுக்கூட்டங்களை கூட்டுவது மாமன்ற சட்டதிட்டங்களில் கட்டாயமாக்கப்பட்டுள்ளது. மாமன்றத்தின் உறுப்பினர்கள் அவரவர் சார்ந்துள்ள அருள்நிலையங்களில் நடவடிக்கைகளை மதிப்பிடவும், கருத்து சொல்லவும், மேலும் திறம்பட செயல்படவும் வழிவகுக்கும் இந்த ஆண்டுக்கூட்டங்கள் மிக முக்கியமாகக் கருதப்படவேண்டும்.

அடியேன் ஒவ்வொரு ஆண்டுக்கூட்டங்களிலும் கலந்துகொள்ள எண்ணங்கொண்டிருந்தாலும். பல்வேறு காரணங்களால் இது சாத்தியமாவதில்லை. அனைத்து நிலையிலும் மாமன்றத்தில் அங்கம் வகிக்கும் ஒவ்வொருவரும் தங்களின் கடமைகளை உணர்ந்து தங்களின் பங்களிப்பைச் செய்யுமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

நாம் அனைவரும் தொடர்ந்து மாமன்ற உணர்வோடு தொடர்ந்து பாடுபட்டால், நம் இந்து தர்மத்தை இன்னும் மாண்பிற்கும் மரியாதைக்கும் உரியதாக உயர்த்த முடியும். நம்முடைய இந்து தர்மம் நம் இந்துக்களை இன்னும் பெரிய அளவில் சென்றடைய வேண்டும். இந்நாட்டு இந்துக்களில் பெரும்பான்மையோர் தங்களின் தர்மத்தை புரிந்து அதனை வாழ்க்கையில் கடைபிடித்தால், நாம் எடுத்துக் கொண்டுள்ள முயற்சியில் வெற்றிபெற்றதாகக் கருதலாம். அதுவரையில் நம் பணி முற்றுப்பெறவில்லை என்றே பொருளாகும்.

இன்று நம் மத்தியில் தன்னலமற்ற தொண்டினை வழங்குபவர்களின் எண்ணிக்கை வெகுவாகக் குறைந்துள்ளது. முன்புபோல் தொண்டு செய்ய அதிகமானோர் வருவதில்லை. மாமன்றம் போன்ற தொண்டூழிய இயக்கங்களுக்கு இதுவே மிகப் பெரிய சவாலாக அமைகிறது.

ஆகவே, நீங்கள் அனைவரும் மனந்தளராமல் 'மக்கள் தொண்டே, மகேசன் தொண்டு' எனும் மந்திரச் சொற்களை மனதில் நிறுத்தி தொடர்ந்து தங்களின் தொண்டை ஆற்றிட வேண்டுமாய் மிகத் தாழ்மையுடன் வேண்டிக் கொள்கிறேன். தங்களின் தன்னலமற்ற தொண்டிற்கு இறையருள் துணை நிற்பதாக!

நன்றி.

இக்கண்,

தங்கள் சேவையில்.

**பேராசிரியர் முனைவர் என்.எஸ். இராஜேந்திரன்**
தேசியத் தலைவர், மலேசிய இந்து தர்ம மாமன்றம்.